செய்தி வெளியீட்டு எண்:558 நாள்:29.8.2009

பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு
புதிய ஊதிய விகிதம்

பல்கலைக்கழகம், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்து தக்க பரிந்துரைகளை அரசுக்கு அளித்திட அலுவலர் குழு ஒன்றை அரசு நியமித்தது.

அந்த அலுவலர் குழு – பல்கலைக்கழக மானியக் குழு வழங்கிய பரிந்துரைகளையும், அவற்றின் அடிப்படையில் மைய அரசு வெளியிட்ட ஆணைகளையும் ஆய்வு செய்தும், பல்வேறு கல்லூரி ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்தும் தனது பரிந்துரைகளை 14.08.2009 அன்று அரசுக்கு அளித்தது.

அலுவலர் குழு அளித்துள்ள பரிந்துரையை ஏற்று பல்கலைக்கழக ஆசிரியர்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பின்வருமாறு திருத்திய ஊதிய விகிதம் வழங்கிடத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது :–

(i) பல்கலைக்கழக ஆசிரியர்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு திருத்திய ஊதிய விகிதம் மற்றும் கல்வித்தர நிர்ணய (Academic Grade Pay) ஊதிய விகிதங்கள் பல்கலைக்கழக மானியக்குழு பரிந்துரைத்தபடி மைய அரசால் அறிவித்துள்ளவாறு மாற்றம் ஏதுமின்றி வழங்கப்படும்.

(ii) புதிதாக நியமனம் செய்யப்படும் உதவிப் பேராசிரியர் ஒருவருக்கு தற்போதுள்ள ஊதியம் ரூ. 19,680 என்பது திருத்திய ஊதிய விகிதப்படி, இனி ரூ. 26,352 ஆக உயரும். அதாவது குறைந்த பட்சம் ரூ. 6,672 கூடுதலாக கிடைக்கும்.

(iii) கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் பேராசிரியர் களுக்கு தற்போது கிடைக்கும் ஊதியம் ரூ. 40,344 என்பது திருத்திய ஊதிய விகிதப்படி இனி ரூ. 62,085 ஆக உயரும். இதனால் 21,741 ரூபாய் கூடுதலாக ஊதியம் கிடைக்கும்.

(iv) பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் பதவிகளின் பெயர்கள் உதவி பேராசிரியர், இணைப் பேராசிரியர் மற்றும் பேராசிரியர் என பல்கலைக்கழக மானியக்குழு பரிந்துரைத்ததை ஏற்று அவ்வாறே பின்பற்றப்படும்.

(v) பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி நூலகர்கள், உதவி நூலகர்கள், உடற்கல்வி இயக்குநர்கள், துணை உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும் உதவி உடற்கல்வி இயக்குநர்கள் ஆகியோருக்கு பல்கலைக்கழக மானியக் குழு அறிவித்துள்ள திருத்திய ஊதிய உயர்வு அளிக்கப்படும். கல்வித் தகுதி குறித்த மாநில அரசின் பிற நிபந்தனைகள் இவர்களுக்கு பொருந்தும்.

(vi) மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போலவே ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதியப் பலன்கள் இவர்களுக்கும் வழங்கப்படும்.

(vii) திருத்திய பல்கலைக்கழக ஊதிய விகிதம், மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது போலவே 1.1.2006 முதல் கருத்தியலாக (Notional) நிர்ணயம் செய்யப்பட்டு 1.1.2007 முதல் பணப்பயன் அளிக்கப்படும். நிலுவைத் தொகை மூன்று தவணைகளில் மாநில அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டது போலவே அளிக்கப்படும்.

(viii) ஊதிய விகிதத்தைத் தவிர, மற்ற படிகளைப் (Other Allowances) பொறுத்தவரை, மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் விகிதாச்சாரப்படியே இவர்களுக்கும் வழங்கப்படும்.

இவ்வாறு ஊதிய உயர்வினை செயல்படுத்துவதால் 20,000 பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் பயனடைவர். இதனால் அரசுக்கு ஆண்டிற்கு ரூ.557.49 கோடி கூடுதல் செலவாகும்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.